**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 401/2019**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : Tr. Krishnaraj |
| Father/Husband's Name | : Arumugam |
| Village | : No.32/62, S.V.Koil Street |
| Taluk | : Tambaram |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.09.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது தாம்பரத்தில் வசித்து ஜோவோ என்கிற தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரது பெயர் ஆனந்த்சந்தர். நானும் எதிரியும் ஜோவோ நிறுவனத்தில் வேலை செய்கிறோம். கடந்த 09.03.2019 அன்று மாலை 04.30 மணியளவில் நான், எதிரி, ராம்குமார், எத்திராஜ், சுஸ்மிதா ஆகியோர்கள் எதிரியின் காரில் சென்னையிலிருந்து சேலத்திற்கு எங்களது நண்பர் கோவிந்தராஜ் என்பவரின் திருமணத்திற்காக சென்றோம். அடுத்த நாள் காலை திருமணத்தை முடித்துவிட்டு கிளம்பி அதே காரில் சென்னை நோக்கி வந்து கொண்டிருக்கும் போது ஒரு இடத்தில் விபத்து நடந்தது. நான் காரில் பின் சீட்டில் அரை தூக்கத்தில் பயணித்து கொண்டிருந்தேன். எந்த இடத்தில் விபத்து நடந்தது என்றும் எப்படி விபத்து நடந்தது என்றும் தெரியாது. விபத்து நடந்த பிறகு நாங்கள் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அனுமதிக்கப்பட்டோம்.

காரில் முன் சீட்டில் அமர்ந்திருந்த சுஸ்மிதா என்பவர் மட்டும் இறந்துவிட்டார். மற்ற நபர்களுக்கு லேசான காயம் ஏற்பட்டது. எத்திராஜ் என்பவருக்கு பலமான காயம் ஏற்பட்டது. சாட்சியிடம் இவ்வழக்கு புகார் காண்பிக்கப்பட்டது. சாட்சி அந்த புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்று கூறுகிறார். **(அந்த புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அந்த கையொப்பத்தை எப்பொழுது போட்டேன் என்று தெரியவில்லை விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் இருக்கும் போது கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக கையெழுத்து போட்டேன் என்று தெரியாது கேட்டார்கள் போட்டேன். என்னிடம் போலிசார் மருத்துவமனையில் கையெழுத்து வாங்கினார்கள் அதற்கு பிறகு எந்த விசாரணையும் செய்யவில்லை.

**இந்த சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

ஆனந்த்சந்தர் எனது நண்பர் என்றால் சரிதான். புகாரில் எழுதியுள்ள விவரங்களை நான் தான் எழுதினேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை மருத்துவமனையில் விபத்து சம்மந்தமாக விசாரித்தார்கள் என்று சொன்னால் விசாரிக்கவில்லை கையொப்பம் போட சொன்னார்கள் போட்டேன். ஆனந்த்சந்தர் Sudenbrake போட்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் நான் பின் சீட்டில் தூங்கி கொண்டிருந்தேன் விபத்து நடந்தது தெரியாது. சம்பவத்தன்று காரை ஓட்டி வந்தது ஆனந்த்சந்தர் என்றால் சரிதான். ஆனந்த்சந்தர் Sudenbrake போட்டு இடதுபக்கம் திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி எனது நண்பர் என்பதால் நான் எந்த விவரமும் தெரியாது என்று சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd. xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.